குழப்பமெல்லாம் நிச்சயமாகத் தீரும். தலைமைச் செயலாளரைப் பற்றி நாம் கொண்டிருக்கின்ற எண்ணமும் நிலைபெறும். தலைமைச் செயலாளர் தமிழகத்தைக் காட்டிக்கொடுக்கவோ, தமிழக அரசுக்கு விரோதமாக நடக்கவோ இன்னொரு அதிகாரியிடம் பேசவில்லை. அவரோடு மறுமுனையில் பேசிய அதிகாரியும், அத்தகைய எண்ணத்தோடு பேசியவரல்லர். அந்தப் பேச்சினுடைய ஆழமான உட்கருத்தை நாம் படித்துப் பார்க்கும்போது அவர்களை அப்படி சந்தேகப்படுவதற்குக் கிஞ்சித்தும் இடமில்லை என்ற காரணத்தால், இந்தப் பிரச்சினையை இதோடு இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் விட்டுவிட வேண்டும், இதனை நீதி விசாரணைக்கு உட்படுத்துவோம் என்ற உறுதியோடு என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2. கவன ஈர்ப்பு

எடப்பாடி தொகுதி, சரபங்கா நதியில் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சரபங்கா நதியில் தூர் வார வேண்டியதன் அவசியம்” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

காவேரி வடிநிலம் நவீனப்படுத்தும் திட்டத்தில் சரபங்கா நதி முழுவதும் தூர் வார, அணைக்கட்டுகள் மற்றும் குளங்களை மேம்படுத்த ரூ. 33.80 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி சின்னப்பம்பட்டியிலிருந்து தேவூர் வரை தூர் வாரும் திட்டம் இதில் அடங்கும். இத்திட்டம் குறித்த மதிப்பீடுகள் பரிசீலனையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், சரபங்கா நதியில் தூர் வாருவதற்காகவும், அணைக்கட்டுகள் மற்றும் குளங்களை மேம்படுத்துவதற்காகவும் 33.80 கோடி ரூபாயில் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அதற்காக நிதியொதுக்கி யிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்காக, முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சரபங்கா நதிக்கு ஏற்காடு மலையிலிருந்து மழைக் காலங்களில் நீர் வருகின்றது. அந்த நீரானது ஓமலூர், சக்கரசெட்டிப்பட்டி வழியாக, எடப்பாடி தொகுதியிலே சின்னப்பம்பட்டிக்கு அருகில் வெள்ளாளபுரம் ஊராட்சி மற்றும் தாதாபுரம், வேம்பனேரி ஊராட்சி வழியாக, எடப்பாடி நகரத்தில் உள்ள பாலத்தின் வழியாக, தேவூர் பேரூராட்சியின் வழியாக வந்து காணியாளம்பட்டி அருகில் உள்ள அன்னம்மார்கோயில் அருகில் காவிரி ஆற்றிலே கலக்கின்றது. இந்த நதியானது மிகவும் தூர்ந்துவிட்டது. அதேநேரத்தில், சில இடங்களில் ஆகாயத் தாமரைகள் படர்ந்து நீர் செல்ல முடியாத வகையில் தடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளன. அதேநேரத்தில், 2, 3 இடங்களிலே மக்கள் நதியைக் கடந்து செல்ல முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சரபங்கா நதியைத் தூர் வார வேண்டுமென்றும், அதேநேரத்தில் எடப்பாடியில் கவுண்டம்பட்டிக்கும், வெள்ளாண்டிவலசுக்கும் இடையிலே ஒரு பாலமும், வெள்ளாளபுரம்

2008 ஏப்ரல் 15] [திரு. வை. காவேரி]

ஊராட்சியில் நத்தகாடு என்ற பகுதியிலே ஒரு பாலமும், வெள்ளாளபுரம் ஊராட்சியிலே செங்காடு என்ற பகுதியிலே ஒரு பாலமும் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே நான் ஓமலூர் சக்கரசெட்டிப்பட்டியில் அணை கட்ட வேண்டும் என்று பேசியுள்ளேன் . . .

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காவேரி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. வை. காவேரி: அதையும் செய்து கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: ஒரே ஒரு திருத்தம். அவர் அந்த நதியினுடைய பூர்வாங்கத்தைப்பற்றிச் சொல்லி இருக்கிறார். நிதி ஒதுக்கி இருக்கிறோம் என்று சொன்னார். இல்லை; 33.80 கோடி ரூபாய் செலவாகும் என் மதிப்பிடப்பட்டுள்ளது. மற்றபடி அவர் சொன்ன குறைபாடுகள் எல்லாம் தூர் வாருகிற காலம் வந்தால் தானாகவே நிவர்த்தி ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு 'சரி' என்று சொல்லிவிட்டார்கள் இல்லையா? உட்காருங்கள். திரு. காவேரி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. வை. காவேரி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை வைத்து நான் நிதி ஒதுக்கிவிட்டார்கள் என்று சொல்லிவிட்டேன். இருப்பினும், நிதி ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமாறு அன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.